**மாகாணக் கல்வித் திணைக்களம்**

**வடக்கு மாகாணம்**

**மாகாண மட்ட ஆண்டிறுதிப் பொதுப் பரீட்சை – 2013**

தரம் :- 11 **தமிழ் மொழியும் இலக்கியமும் புள்ளியிடும் திட்டம்**

## விடைகளும் புள்ளித்திட்டமும்

## பகுதி I

| | | | |
|---|---|---|---|
| 01) 2 | 11) 3 | 21) 3 | 31) 2 |
| 02) 2 | 12) 2 | 22) 4 | 32) 3 |
| 03) 3 | 13) 3 | 23) 4 | 33) 2 |
| 04) 1 | 14) 3 | 24) 1 | 34) 4 |
| 05) 3 | 15) 4 | 25) 3 | 35) 3 |
| 06) 3 | 16) 3 | 26) 3 | 36) 4 |
| 07) 4 | 17) 1 | 27) 4 | 37) 2 |
| 08) 2 | 18) 2 | 28) 3 | 38) 4 |
| 09) 1 | 19) 2 | 29) 2 | 39) 1 |
| 10) 3 | 20) 3 | 30) 4 | 40) 3 |

(40 x 1 = 40புள்ளிகள்)

## பகுதி II

**01. சுருக்கமான விடைஎழுதுக.**

1. அஞ்சும் + அஞ்சும் + கயல் + அஞ்சும் + கடல் + அஞ்சும் + அஞ்சும்
2. ஆக்கப்பெயர் உ-ம்:- புத்திசாலி
3. கலகம் - குழப்பம்
   கழகம் - சபை, குழு
4. தாழை - தென்னைமரம், தாழைமரம்
5. விதிக்குரங்கு - உருவக அணி
6. இந்த நூல்கள் சமுதாயத்தில் பல மாற்றங்களைத் தோற்றுவித்தன.
7. இலகுவான கருத்து வெளிப்பாடு, சிந்தனைத் தாக்கத்தை அதிகளவில் ஏற்படுத்தல்.
8. துயரப்படும் மக்களை சுனாமி கூட விட்டுவைக்கவில்லை.
9. வியாபாரம், மக்களின் கவனத்தை ஈர்த்தல், கொள்கை பரப்புதல்......
10. விவசாய சமூகத்திற்குரிய கிளை மொழிகள்.

**02. அ. விளக்கக் கட்டுரை**

*அறிமுகம்* - எமது வாழ்விற்கு இயற்கையின் பங்களிப்பு

*தொடருரை*

- இயற்கையால் எமக்குக் கிடைக்கும் நன்மைகள்
- மனிதனின் தேவை அதிகரிப்பால் நிலத்தை அகழ்தல், வளங்களை மிகையாகப் பயன்படுத்தல், தொழிற்சாலைக்கழிவுகள், ஆயுதப்பரிசோதனைகள், காடழிப்பு என்பன இடம்பெறுதல்.
- இயற்கையைப் பேணுதல்.

*முடிவுரை* - தொகுத்து எழுதுதல், சொந்தக் கருத்துக்களை வெளிப்படுத்தல்.

**ஆ. சொற்பொழிவு** -

சொற்பொழிவு வடிவத்தில் அமைந்திருத்தல்.

சபையோரை விளித்துப் பேசுதல்.

இடையிடையே சபையோரை முன்னிலைப்படுத்தல்.

தர்க்கரீதியாகவும், ஒழுங்காகவும் கருத்துக்களை முன்வைத்தல். தொகுத்துரைத்து நிறைவு செய்தல்.

- வாசிப்புப்பழக்கம் குறைந்து செல்வதற்கான காரணங்கள்

- வாசிப்புப் பழக்கம் குறைவதால் ஏற்படும் விளைவுகள்
- வாசிப்புப் பழக்கத்தை அதிகரிப்பதற்கான வழிமுறைகள்.

**இ. உரையாடல்**

உரையாடற்பாங்கில் அமைந்திருத்தல்.
பேச்சு மொழியில் உரையாடல் அமையலாம்.
சிறுசிறு வாக்கியங்களாகவும், உரையாடலுக்கிடையில் தொடர்பும் காணப்படல்.

*பிரதான விடயத்துடன் உரையாடல் தொடர்புபட்டிருத்தல்.*

- சிறுவர்களை வேலைக்கமர்த்தல், வார்த்தைப்பிரயோகம், பாலியல் ரீதியிலான துன்புறுத்தல் (துன்புறுத்தலுக்குள்ளாகும் சந்தர்ப்பங்கள்)
- சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பான விழிப்புணர்வு பற்றிய கருத்துக்கள்.

**ஈ. சிறுகதை**

- பொருத்தமான தலைப்பிடல்
- சிறுகதைக்குரிய அமைப்பு இருத்தல்
- கற்பனையாக எழுதப்படல்
- கதைக்கருவினைச் சுவைபட நகர்த்தல்
- கதாபாத்திரங்களின் பெயர்கள் கற்பனைப் பெயர்களாக இருத்தல்.

**03.** 1. மையக்கருத்து
- சமுதாய முன்னேற்றத்திற்கு இலட்சியம் அவசியம்.

2. துணைக்கருத்து
   i. இலட்சியத்தைக் கடைப்பிடித்தல் சமுதாயம் முன்னேறும் இல்லாவிடின் பின்னோக்கும்.
   ii. இலட்சியம் இல்லாதவன் வாழ்க்கை வெறும் யாக்கை
   iii. இலட்சியம் மக்களை ஆளுமை மிக்கவர்களாக மாற்றும்.
   iv. இலட்சிய உருவாக்கம் சமுதாய விரிவாக்கத்திற்கு வழிவகுத்தது.
   v இலட்சியத்தை எப்பாடுபட்டும் நிறைவேற்ற வேண்டும்.

**04.** i. இப்பாடலில் குறிப்பிடப்படுவது சிட்டுக்குருவி
ii. கவிஞர் அதன் தோற்றத்தை நெல் போன்ற மூக்காகவும் கடுகு போன்ற கண்ணாகவும் பஞ்சு போன்ற உடலாகவும் குறிப்பிடுகின்றார்.
iii. வெள்ளம் போல் புத்துணர்ச்சி, விம்மும் மூக்கில் விடுதலையின் மென்கீதம் என்னும் தொடர்களின் பொருள் சுறுசுறுப்பும் சுதந்திரமும் ஆகும்.
iv. கள்வருக்கு பயமில்லாச் செல்வம் கலை ஞானம்
v. இப்பாடலில் கையாளப்பட்டுள்ள இணைமொழி விண்ணும் மண்ணும்

**05. கடிதம் / அறிக்கை.**

| | | |
|---|---|---|
| அமைப்பு | - | 04புள்ளிகள் |
| உள்ளடக்கம் | - | 08புள்ளிகள் |
| மொழிநடை | - | 03புள்ளிகள் |

- பத்திரிகை ஆசிரியரிடம் கடிதத்தைப் பிரசுரிக்கும்படி வேண்டுதல்.
- கடிதத்தில் இடம்பெற வேண்டிய விடயங்கள்
  - கையடக்கத் தொலைபேசிகளின் பாவனை.
  - ஆடை, அணிகலன்களின் பாவனை
  - இளவயதுத் திருமணம்
  - நெறிபிறழ்வான நடத்தைகள்
  - கற்றலில் ஆர்வமின்மை
  - மூத்தோர்களை மதிக்காமை
- விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டிய அவசியத்தை வலியுறுத்தல்.

அல்லது

அறிக்கை

- விடயம் பற்றிய தலைப்பு இடல்.
- நியமமொழியில் எழுதுதல்.
- அறிக்கையில் இடம்பெற வேண்டிய விடயங்கள்
    1. இடம்
    2. காலம்
    3. நேரம்
    4. நோக்கம்

## பகுதி III

**01.** i) அ) நுட்பமான அறிவு
ஆ) கல்வி இல்லாதவர்களுக்கு நுட்பமான அறிவு சிலவேளைகளில் காணப்பட்டாலும் அதனை அறிவாகப் பெரியோர்கள் கொள்ளமாட்டார்.

ii) அ) திரும்பி / சுழன்று
ஆ) கிழக்குப் பிரதேசம்

iii) அ) கு.ப. ராஜகோபாலன்
ஆ) மணிக்கொடி, சுதந்திரச்சங்கு, பாரத தேவி, கிராம ஊழியன்

iv) அ) ரா.பி. சேதுப்பிள்ளை
ஆ) தமிழின்பம்

v) குமாரப்புலவரால் ஒட்டகக்கூத்தருக்கு

vi) அ) உவமையணி
ஆ) உவமானம் - அற்றகுளத்தில் அறுநீர்ப்பறவை
உவமேயம் - வறுமை வந்த போது நீங்கிச் செல்லும் உறவினர்
பொதுத்தன்மை - நீங்குதல்

vii) வலிமைமிக்க இலை வடிவிலமைந்த வேலையுடைய பாண்டிய மன்னன்

viii) தலைவியைக் காண்பதற்காக உயிரற்ற வெறும் உடலுடன் வருவதாகத் தலைவியிடம் சொல் என்று கூறினான்.

ix) நிழல், பழங்கள், சரணாலயம், பிசின்

x) கல்வி இல்லாதோரும் தாய்மொழிப் பாடல்களைப் படித்து இன்புறும் சுதந்திரம்.

(10 x 2 = 20புள்ளிகள்)

**02.**

அ) பொருள் :- தாழம்பூவின் இதழ்கள் பெரியதாக இருப்பினும் அதன் வாசனை குறைவானது. மகிழம்பூவின் இதழ் சிறிதாக இருந்த போதும் அதன் வாசனை மிகச்சிறந்தது. கடல் பெரிதாக இருப்பினும் அதன் நீரானது குடிப்பதற்கோ கழுவுவதற்கோ பயன்பாடற்றது. ஆகவே ஒருவரது உருவத்தை வைத்துக் கொண்டு அவரது அறிவு ஆற்றலை அளவிட முடியாது.

சிறப்பு :- இவ்வடியின் மூலம் ஒருவரது அறிவாற்றலுக்கும் உருவத்துக்கும் சம்பந்தம் இல்லை எனக்காட்டப்படுகிறது.

ஆ) பொருள் :- பாண்டியன் உலாவருதலை பார்க்கக் கூடாது என்று பெண்ணின் தாய் பாதுகாவலான பெரிய அறையில் அடைத்து அறைக் கதவுகள் பொருத்தும்படியாக பூட்டிவிடுகின்றாள். ஆனால் உலாவரும் பாண்டியனின் பேரழகைக் காண்பதற்குக் கதவில் முன்னமேயே சாவி போட்டுப் பூட்டித் திறப்பதற்கு வாய்ப்பாகத் துளையிட்டு வைத்திருந்தவருக்கு என்ன பிரதியுபகாரம் செய்வேன் என மகிழ்கின்றாள்.

சிறப்பு :- இவ்வடியின் மூலம் தலைவியின் மனமகிழ்ச்சியின் உச்ச வெளிப்பாடு, துளைபோட்டவருக்கு செய்யக்கூடிய கைம்மாறே இல்லை என்று கூறுவதாகப் பாடப்பட்டுள்ளமை சிறப்பாக அமைகிறது. (நன்றியுணர்வு)

இ) பொருள் :- ஆயிரம் வருடத்திற்கு ஒரு தரம், கேட்பவற்றையெல்லாம் வரையாது கொடுக்கின்ற தமிழ் என்னும் கற்பக மரத்தில் தோன்றி மலருகின்ற பூவைப் போன்ற இந்தக்கவிஞர் சிறுபிள்ளைகள் முதல், நன்கு கற்றுத்தேர்ந்த புலமை பெற்றவர்கள் வரையான அனைவரும் படித்து இன்பம் பெறுவதற்குரிய அழகிய தமிழ்ப்பாடல்களைத் தந்தமையால் கல்வி கற்காதவர்களும், தாய்மொழியாகிய தமிழ்பாடல்களைப் படித்து இன்பமடையும் வாய்ப்பை அவர்களுக்குக் கொடுத்துள்ளார்.

சிறப்பு :- இவ்வடிகள் மூலம் பாரதியாரின் அருமைத்தன்மை உவமை மூலம் புலப்படுத்தப்படுகின்றது.
உவமானம் - கற்பக விருட்சத்தில் தோன்றும் பூ
உவமேயம் - பாரதியார்
பொதுத்தன்மை - பாரதியாரின் சிறப்பு உருபு - போன்ற

ஈ) பொருள் :- உள்ளத்தின் ஆழத்தில் பயம், அதுபாட்டிற்குப் புழுப்போலத் துளைத்துக் கொண்டே இருந்தது. மேலே மட்டும் சமாதானம், சிறுது நேரத்திற்கு ஒரு தடவை அந்தப் பயம் மீண்டும் வந்து தோன்றும். உடல் பதறும், நெஞ்சு வறமும், அடி வயிறு கலங்கும், முகம் மாற்றம் அடையும்.
மீண்டும் மெதுவாக சமாதானத்தின் பலம் அதிகமாகும். பயத்தைக் கீழே கொண்டு செல்லும்.

சிறப்பு :- இவ்வடிகளில் பயத்தின் தன்மை உவமை மூலம் சிறப்பிக்கப்படுகின்றது.
உவமானம் - புழு
உவமேயம் - பயம்
பொதுத்தன்மை - உறுத்தும் தன்மை
உவமையுருபு - போல

**03.**

- தாய்மொழிப்பற்று
  நாம் தமிழர் என்பதை வலியுறுத்தல்
  மகனை ‘வணக்கம்’ என்று கூறுமாறு வழிப்படுத்தல்
- கலை உணர்வு
  இசைத்திறன் - ஆலயத்தில் தேவாரம் பாடல்
  நடிப்புத்திறன் - கண்ணகி பாத்திரம்
- முடிவெடுக்கும் திறன்
  மகனது உளச்சோர்வை நீக்கும் வகையில் பெரிய வைத்தியரிடம் வாதிட்டமை.

(5 + 5 + 5)புள்ளிகள்

அல்லது

- ஒட்டக்கூத்தரின் பலம்
  சோழ அவையின் தலைமைப் புலவராகத் திகழ்ந்து மன்னர் புகழ் பாடியமை.
  விரைந்து கவிபாடும் ஆற்றல் - 3மாதத்திற்குள்
  இராமாயணம் பாடி முடித்தமை.
  பல இலக்கியங்களைப் படைத்தமை.
- ஒட்டக்கூத்தரின் பலவீனம்
  உறுதியற்ற உள்ளம்
  தவறான முடிவுகள் எடுத்தல்
  எளிதில் உணர்ச்சி வசப்படுதல்
  பொறாமை உள்ளம்
  தற்புகழ்ச்சி
  மனிதாபிமானமற்ற தன்மை.
  பொதுமக்கள் வழக்குப் பிரயோகம் அறியாதவர்.

(5 + 10)புள்ளிகள்

**04.** ◆ காதலில் தூது
உ-ம்:- ஓடுகின்ற மேகங்கள்....... (தலைவன், பிரிவுத்துயர்)
உ-ம்:-□மண்ணெலாம்.... (தலைவி)
□மங்கையர்..........□ (தலைவி)

◆ உடன் போக்கு குறித்த இரங்கல்
□............கயற் கண்ணியோ சுரம் கால் வைப்பதே□ (செவிலி இரங்கல்)

(2 + 4 + 4)புள்ளிகள்

அல்லது

◆ நெருக்கீடு
நளனின் உருவில் தேவர்கள் நால்வர் அவையில் இருந்தமை.

◆ வெற்றி கொண்ட விதம்
இறைவனை வேண்டல்.
மதி நுட்பத்தைப் பயன்படுத்தி வெல்லல். (விளக்கி எழுதுதல்)

(5 + 10)புள்ளிகள்

**05.** i) பெயர்க் காரணம் :- கடவுள் வாழ்த்துப்பாடல் உட்பட 400 வெண்பாக்கள் கொண்டு ஒவ்வொரு பாடலின் இறுதியிலும் ஒவ்வொரு பழமொழி காணப்படல்.

ii) கற்றறிந்தார் :- அடக்கம் உடையவர்.
கற்றறியாதார் :- தம்மைப் புகழ்ந்துரைப்பர்.

iii) நிறைகுடம் நீர் தளும்பல் இல் - பழமொழி குறிப்பிட்டு விளக்குதல் வேண்டும்.

(5 + 5 + 5)புள்ளிகள்

**06.** i) வெற்றி ஏற்படினும் தோல்வி ஏற்படினும் காலம் முன்னோக்கியே செல்லும். இம்மியளவும் பின்னோக்காது.

ii) உருவக அணி குறிப்பிடப்பட்டு விளக்கப்படல் வேண்டும்.

iii) காலம் அழிந்து கொண்டே செல்லும், மீள வராது. எனவே எதிர்காலம் பற்றிய நோக்கு வேண்டும்.

(3 + 3 + 4)புள்ளிகள்

**07.** குடும்பப் பெண் :- கன்னியாக இருக்கும் போது கன்னிக்குரிய கடமையையும் குடும்பப் பெண்ணாக இருக்கும் போது மனைவிக்குரிய கடமையையும் செய்தல்.

கசாப்புக் கடைக்காரன் :- குலத் தொழிலை செம்மையாக மேற்கொண்டமை.
பெற்றோருக்குரிய கடமையைச் செய்தமை.
அவரவர் கடமையை உரியவாறு செய்தால் ஞானம் கைவல்லியமாகும்.

(5 + 5)புள்ளிகள்

*****